மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 523/2022

பெயர் : செல்வம் (PW1)

க/பெ : பெரியசாமி

கிராமம் :

தாலுகா :

Calling :

(Accused Kumaravel is present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the5th day of December 2023

**<u>முதல் விசாரணை</u>**

1)நான் வேப்பலோடையில் வசிக்கிறேன். நான் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்கிறேன். சாட்சிகள் இருதயராஜ், ராஜ் ஆகியோர்களை தெரியும். இறந்து போன பெரியசாமி என் கணவர். என் கணவர் விபத்தில் இறந்து விட்டார்

2) தேதி மாதம் நினைவில் இல்லை. 6 வருடங்களுக்கு முன்பாக எங்கள் ஊர் பஸ் ஸ்டாப்பபில் ECR ரோட்டை கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார்கள். என் கணவரை வேப்பலோடை மருத்துவமனையில் இருந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். என் கணவர் கோமா நிலைக்கு சென்று ஒரு வாரம் சிகிச்சையில் இருந்து அதன்பிறகு சிகிச்சை பலனின்றி இறந்து போனார். என் னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான்,அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். அதை நான் தூத்துக்குடிஅரசு மருத்துவமனையில் வைத்து செய்து கொடுத்தேன். ( **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நடந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் போலிசார் கேட்டுக் கொண்டதால் நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு படிப்பறிவு இல்லாததால் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.